மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றவாறு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய மாலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை காலை 9.30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 7.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

36. ஆந்திர மாநிலம், புட்டபர்த்தி ஸ்ரீசத்யசாயி மேல்படிப்பு நிறுவனம் 1-4-1995 முதல் 15-5-1995 வரை தமிழ்நாட்டில் கல்வி சார்ந்த பயணத்திற்கு பயன்படுத்திய இயக்கூர்தி பதிவு எண் எபி. 02/வி. 0909-க்குச் செலுத்த வேண்டிய வரிக்கு விலக்களிப்பது குறித்து உள் துறையின் 8-3-1995 ஆம் நாளிட்ட 256 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

46. பாசனம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1996-97 (தமிழ், ஆங்கிலம்).

47. பொதுப்பணித் துறையின் கட்டிடப் பணிகள் பற்றிய ஆய்வுரை, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

48. பாசனம் மற்றும் நிலத்தடி நீர் பற்றிய சாதனைத் திட்டம், 1995-96 (ஆங்கிலம்).